
POPE
CELESTINE
V
MAY
19

## *புனித செலஸ்தீன் இராயப்பர் (1227-1296)*

இவர் பக்தி உள்ளவர், கல்வி அறிவு பெற்றவர். 20ஆம் வயதில் உலகத்தைத் துறந்து, ஒரு மலையின் சிற்றறை ஒன்றை அமைத்து மூன்று ஆண்டுகளாக அதில் வாழ்ந்தார். குருப்பட்டம் பெற்ற பின் ஒரு குகையில் ஐந்து ஆண்டுகள் வாழ்ந்தார். பின்னர் இரு தோழர்களோடு மஜெல்லா என்னும் மலைக்குச் சென்று தவ வாழ்வு நடத்தினார். சிலர் அவருடைய சீடர்களாக விரும்பினர். அவர்களுக்கென ஒரு சபையை ஏற்படுத்தனார். அது மிக மிகப் புகழ்பெறலாயிற்று. இவரது காலத்திலேயே 36 மடங்கள் கட்டப்பட்டு, 690 சந்நியாசிகள் அங்கு வாழ்ந்து வந்தார்கள். இவரது தூய வாழ்வைக் கண்ட ஆயர்களும், குருக்களும், இவரை 1294-ல் பாப்புவாக தேர்நதெடுத்தார்கள். இவர் திருச்சபைச் சட்டங்கள் நன்கு அறிந்தவரல்லவர். உலக காரியங்களில் போதிய அனுபவம் கிடையாது. எனவே இந்த உயர் பதவியினால் மிக சங்கடப்பட்டார். அறிஞர்களை கலந்து ஆலோசித்து பிறகு தம் பதவியை இராஜினாமா செய்தார். நான்கு மாத காலமே இவர் பாப்புவாக இருந்தார். இவருக்குப் பின் பாப்புவாக வந்தவர் இவரை நன்கு நடத்தவில்லை, இவரால் உபத்திரவம் ஏற்படலாம் என்று சந்தேகப்பட்டார். விவேகமற்ற சிலர், புதிய பாப்புவுக்கு துர்புத்தி சொன்னார்கள். பாப்பு நம் புனிதரை சிறையில் அடைத்தார். 10 மாதங்களுக்குப் பின் சிறையில்இறந்தார்.

**சிந்தனை:**

"கடவுளுடன் அந்நியோந்நியமாக பேச வேண்டுமானால் அவரோடு தனித்து வாழ்வதை நீ நேசிக்க வேண்டும்" (புனித செலஸ்தீன் இராயப்பர்)

**செபம்:**

ஆண்டவரே, திருச்சபைக்கு ஏற்ற தலைவர்களைத் தாரும்.

# Pope Celestine V




# MAY 19

# Pope Celestine V




# MAY 19